| Page No.13 | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 17.02.2025 |
| O.S. No. | 78/2020 |
| வா.சா.1 | தங்கமணி |

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் நாள் தங்கமணி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கமணி | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

1 மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. நான் M.Sc (B.Ed) படித்துள்ளேன். 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை படித்துப்பார்த்தேனா என்றால் சரியாக படிக்கவில்லை. வழக்கு அயிட்டம் எண்.2 வது சொத்தானது 1ஆம் பிரதிவாதிக்கு பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதிக்கு நான் பதிலுறை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு அயிட்டம் எண்.2 வது சொத்தானது 1ஆம் பிரதிவாதியின் தாய் மற்றும் தந்தைக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.
2. மேற்படி 1ஆம் பிரதிவாதியின் தந்தை மற்றும் தாயின் பெயர் முறையே மாரப்பகவுண்டர் மற்றும் மாராக்காள் என்றால் சரிதான். மேற்படி மாரப்பகவுண்டர் மற்றும் மாராக்காள் ஆகியோருக்கு, 1ஆம் பிரதிவாதியும், அவருடைய சகோதரியான சரசுவும்தான் வாரிசுதாரர்கள்

என்றால் சரிதான். மேற்படி சரசு என்பவர் வழக்கு 2வது அயிட்டச் சொத்தில் தனக்கு பாத்தியப்பட்ட பங்கை, 1ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்தைத்தான் வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் 1ஆம் பிரதிவாதியானவர் 4ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு 2வது அயிட்டச் சொத்தில் நானும், 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளும் பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல.

3. எனது அப்பா 2016ஆம் ஆண்டு காலமானார். எங்களது குடும்ப சொத்துக்களை எங்கள் அப்பா இறக்கும்வரை அவர் தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறந்தபிறகு, வழக்கு 1வது அயிட்டச் சொத்தை நாங்கள் அனைவரும் ஒன்றாக பராமரித்து வருகிறோம் என்றால் சரியல்ல, நான் மட்டும்தான் பராமரித்து வருகிறேன். மேற்படி சொத்தில் எவ்வளவு வருமானம் வரும் என்றால் ஆண்டுக்கு ரூ.20,000/- வரும், அதை நான் என் அம்மாவிடம் கொடுத்துவிடுவேன். மேற்படி பணம் கொடுத்ததற்கான இரசீது வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வருமானம் வரும் விவரத்தை எனது வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு 1வது அயிட்ட சொத்தை நான் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்ததாகவும், மேற்படி சொத்திலிருந்து கிடைத்த பணத்தை எனது அம்மாவிடம் கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
4. தடை உத்தரவு கேட்டு இ.ம.எண்.3/2020 மற்றும் 04/2020 என்ற மனுக்களை தாக்கல் செய்திருந்தேன் என்றும், மேற்படி மனுக்கள் என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு 1வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பாகப்பிரிவினையை வழங்க 1ஆம் பிரதிவாதிக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வழக்கு 2வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>4ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி, வழக்கு 2வது அயிட்ட சொத்தில் பாதியை, 1ஆம் பிரதிவாதியின் அம்மா கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி, வழக்கு 2வது அயிட்ட சொத்தில் மற்றொரு பாதியை, 1ஆம் பிரதிவாதியின் அப்பா கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ஆம் பிரதிவாதியின் அம்மா மற்றும் அப்பா ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 2வது அயிட்ட சொத்தானது 1ஆம் பிரதிவாதியின் அப்பா, அம்மா இறந்ததற்கு பின்னிட்டு, 1ஆம் பிரதிவாதிக்கும், அவருடைய சகோதரியான சரசுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி, சரசு தனது பங்கை 1ஆம் பிரதிவாதிக்கு, எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வழக்கு 2வது அயிட்ட சொத்தானது, 1ஆம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரிக்கும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தில் 1ஆம் பிரதிவாதிக்கு, அவரது சகோதரி எழுதிக்கொடுத்த ஆவணத்தின்படி, மேற்படி சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, எனது சித்தியிடம் கிரையம் வாங்குவதற்கு எனது அப்பாதான் பணம் கொடுத்தார். சரசுவிடமிருந்து சொத்தை எழுதி வாங்கியதற்கான கிரையத்தொகையை எனது அப்பாதான் கொடுத்தார் என்று எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சொத்தை எழுதி வாங்க தனது அப்பா பணம் கொடுத்ததாக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
3. வழக்கு 2வது அயிட்ட சொத்தில் எனக்கோ, எனது சகோதரிகளுக்கோ உரிமை இல்லை என்றும், அதனால் அதில் நாங்கள் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி, வழக்கு 2வது அயிட்ட சொத்தை 1ஆம் பிரதிவாதியானவர் 4ஆம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4ஆம் பிரதிவாதி தனது பெயரில் மேற்படி சொத்திற்கு பட்டா பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ஆம் பிரதிவாதி மேற்படி சொத்தில் பஞ்சாயத்தில் அனுமதி வாங்கி, வீடு கட்டியுள்ளார் என்றால் வீடு கட்டுள்ள விவரம் தெரியும், ஆனால் அனுமதி வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. 4ஆம் பிரதிவாதி மேற்படி வீட்டிற்கான மின்சார இணைப்பு பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது,

ஆனால் எனது தாத்தா காலத்தில் மேற்படி சொத்தில் மின் இணைப்பு இருந்தது.

4. 2வது அயிட்ட சொத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றுக்கான மின் இணைப்பு எண் 49 என்றால் மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது, ஆனால் மின் இணைப்பு இருந்தது. மேற்படி மின் இணைப்பு தற்போது 4ஆம் பிரதிவாதியின் பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு 2வது அயிட்ட சொத்தில் 4ஆம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் அவர் இருப்பதாக சொல்கிறார்கள், ஆனால் நான் பார்த்ததில்லை.
5. 4ஆம் பிரதிவாதிக்கு 1ஆம் பிரதிவாதி வழக்கு 2வது அயிட்ட சொத்தை எழுதிக்கொடுத்த பிறகு, நான் மேற்படி சொத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி விவசாயம் செய்து வந்தார் என்றும், வேறு வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனது சகோதரிகள் வேலைக்கு செல்கிறார்களா என்றால் பூங்கொடி இல்லத்தரசியாக உள்ளார், வர்ஷினி நாமக்கல் மாவட்டத்தில் தனியார் பள்ளியை நடத்தி வந்தார்.
6. 1ஆம் பிரதிவாதி கோபி வட்டம், ஒடையாக்கவுண்டன்பாளையத்தில் வசித்து வருகிறார் என்றால் இல்லை, கோபியில் வசித்து வருகிறார். நான் வழக்கு தாக்கல் செய்யும்போதும், என் அம்மா கோபியில்தான் வசித்து வந்தார், அவ்வப்போது, ஒடையாக்கவுண்டன்பாளையத்திற்கு சென்று வந்தார். 4ஆம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றும், அவருடைய பெயருக்கு முன்னால் திருமதி என குறிப்பிடப்பட்டுள்ளது என வாதுரைத்தும், இதுநாள் வரை அதை சரிசெய்ய முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல.
7. 2வது அயிட்ட சொத்தை நான் பராமரித்து வந்ததாகவும், அதில் கிடைத்த வருமானத்தை எனது அம்மாவுக்கும், சகோதரிகளுக்கும் கொடுத்ததாக எனது வழக்கில் சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, எனது அம்மாவிற்குதான் கொடுத்தேன், சகோதரிகளுக்கு கொடுக்கவில்லை. 2வது அயிட்ட சொத்தைப் பொறுத்தவரை நான் நேரடியாக விவசாய வேலை செய்யவில்லை என்றால் சரிதான், சம்பளத்திற்கு ஆள் வைத்து பார்த்தேன். மேற்படி வேலை செய்ய ஆட்களின் பெயரை எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான், அவர் பெயர் முருகன் ஆகும். நான் வழக்கில் சொல்லாமல் தற்போதுதான், எனக்கு

வேண்டப்பட்ட நபரின் பெயரை சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

8. வழக்கு 2வது அயிட்ட சொத்தில் 4ஆம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளதால், மேற்படி சொத்து குறித்து நான் முறையாக மதிப்பீடு செய்து நீதிமன்றக்கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான நகல் உள்ளதா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
9. பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.4 ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் என்றால் பி.சா.ஆ.3 உண்மையான ஆவணம் ஆகும், பி.சா.ஆ.4 ஆவணம் எழுதிக்கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. 4ஆம் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், வழக்கு 2வது அயிட்ட சொத்தையும், 4ஆம் பிரதிவாதியையும் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை 4ஆம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.